

சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (11.09.2025) சென்னை கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள, அன்னாரது திருவுருவச் சிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதிக்கு உட்பட்ட இளைஞர் அணி வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்கள் அறிமுக மற்றும் கழகக் கொள்கை விளக்கப் பாசறைக் கூட்டம் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் ச.பிரபு, ஆர்.சரவணன், ப.பாலமுருகன், என்.எஸ்.தென்னரசு, ரா.நவீன், ஆர்.கே.சுந்தர் ஆகியோர் வரவேற்புரையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் புதிதாக பொறுப்பேற்ற இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு கழக கொள்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். இதில் கவிஞர் காசி முத்துமாணிக்கம், க.தனசேகரன் எம்.சி, கே.கண்ணன் எம்.சி, வாசுகி பாண்டியன், சங்கர் கணேஷ், ஆர்.சசிகுமார், சோ.செந்தில்குமார், ஜம்பு.முருகன், பிகே.குமார், அ.கதிரேசன், சதீஷ் கண்ணன், இராஜ்.செழியன், ஆர்.ராமமூர்த்தி, சி.நந்தகோபால், த.முத்துமாரியப்பன், பாரி நகர் கே.சசி, கே.வி.எஸ்.சுரேஷ், கே.சுதா, ஏ.அசோக்குமார், எம்.சபரி, ஜெ.கமலக்கண்ணன், பாபு, நாகப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஜெர்மனி – இங்கிலாந்து பயணத்தில் தொழில் முதலீடுகளை ஈர்த்து வந்த முதலமைச்சருக்கு பாராட்டு!

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவோம்!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!



கடலூர், செப்.12

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 1109 2025, வியாழக் கிழமை, காட்டு மன்னார்கோவில், எம்.ஆர்.கே கலையரங்கத்தில், கழக தேல் தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

தொகுதி பார்வையாளர்கள் ஏ.அங்கையற்கன்னி, விஜயன் ராம கிருஷ்ணன், சுவை.சுரேஷ், எம்.எம். சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை. கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞான முத்து,ஆர்.சக்திவேல், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கழக செயலாளரும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர் மானங்கள் நிறைவேற்ற ப் பட்டன

இந்திய துணை கண்டத்தில், தமிழ்நாட்டை அனைத்து துறை களிலும் முதன்மை மாநிலமாக உருவாக்கி முதல்வர்களின் முதல்வராய் அனைவராலும் பாராட்டும் பெற்று உழைப் பின் உயர்வாய் திகழும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் தளபதி அவர் கள், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சென்று வந்த பயணம் முதலீடுகளை ஈர்ப்பதிலும் தமிழ் வழி வளர்ச் சிகளுக்கும் வெற்றி பயணமாக அமைந்துள்ளது.

15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீடுகளை நிர்வாகத் திறனால் திராவிட மாடல் அர சின் தொழில் நலத்திட்டங்க ளால் பெற்று, 17 ஆயிரத்து 613 பேருக்கு மேல் வேலை வாய்ப்பு இணையும் வழங்குகின்ற பெரு மைமிக சாதனை படைத்துள் ளார்.

மேலும் முத்தமிழர் என்ற கலைஞரின் தமிழ் உணர்வின் வடிவமாக, ஜெர்மன் கொலோன் பல்கலைக் கழகத் தின் தமிழ்த்துறை நூலகத்தின் பாதுகாப்பாய், வளர்ச்சியாய் 2021ல் 1.25 கோடி ரூபாய் மற் றும் கடந்த ஜூலையில் ரூபாய் 1 கோடி 64 ஆயிரம் திராவிட மாடல் அரசின் சார்பாக அளித்து தாய் மொழி காப்பாள ராம் தலைவர் முதல்வர் தளபதி நேரடியாக சென்று பார்த்து பல் கலை பேராசிரியர்களின் தமி ழர்களின் பாராட்டைப் பெற் றுள்ளார்.

ஈடு இணையில்லா சாதனை களை செய்து உலகப் புகழ் பெற்று வருகை புரிந்துள்ள, இயக்கத்தின் இயக்கமான கழ கத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களை வணங்கி, நன்றி கூறி மாவட்ட கழகம் பெருமை யுடன் தீர்மானம் நிறை வேற்று கிறது.

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை மாவட்டம் முழுவதும் மாநக ரம், நகரம்,ஒன்றியம், பேரூர், ஊராட்சி பகுதிகளில் கொடி ஏற்றி மக்கள் நலத்திட்ட உதவி கள் செய்து சிறப்பாக கொண் டாடுவது என முடிவு செய்யப் பட்டது.

திருமிகு கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் தலைமையில் செப் டம்பர் 17 அன்று கரூர் மாநக ரில் மாபெரும் முப்பெரும் விழா நடைபெற உள்ளது. அந்த திராவிட திருவிழா நிகழ்வில் மாவட்டத்தின் பெருமைமிகு செயலாளர் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் பாசமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் ஆணை ஏற்று, மாவட்டம் முழுவதிலும் இருந்து அனைத்து நிர்வாகி களுக்கும் அணிகளின் பொறுப் பாளர்களும் தொண்டர்களும் பெருந்திரலாக கலந்து கொள் வது என தீர்மானிக்கப்பட்டது.

தலைமைக் கழக அறிவிப் பின்படி மாவட்டத்தின் அனைத்து சட்டமன்ற தொகுதி களிலும் ஓரணியில் தமிழ்நாடு சிறப்பாக செயல்படுத்தப்பட் டுள்ளது. அதேபோன்று மாவட் டச் செயலாளர் அவர்களின் ஆலோசனை வழிகாட்டுதல் தேர்தல் பணி பொறுப்புகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக செயல்படுகிறார்கள். தற்பொ ழுது பணிக்குழுக்களும் அமைக் கப்பட்டு விட்டது. கழகப் பணி யாற்றவும் முதல் கடமை என உறுதியுடன் செய்யப்பட்டது.

கழகத் தலைவராக பொறுப் பேற்று 8ம் ஆண்டில் பேராற்றல் பெருவடிவமாக திகழும் தள பதி அவர்கள் தொடர்ந்து நடைப்பெற்ற 11 தேர்தல்களி லும் மாபெரும் வெற்றிப் பெற்று சாதனைப் படைத்துள்ள னர். அவரின் ஓய்வில்லா உழைப்பை பார்த்து நாடே வியந்து பாராட்டுகிறது. அப்ப டிப்பட்ட பெருமைமிகு தளப தியின் ஆணையேற்று மாவட்ட செயலாளர் அவர்களின் பெரு மைமிகு உழைப்பின் பாதை யில் அனைவரும் சென்று வரு கின்ற சட்டமன்ற தேர்தலில் அனைத்து தொகுதிகளையும் வெற்றிப்பெற்றிட உழைப்பது வென்று தலைவரிடம் ஒப்ப டைப்பது என தீர்மானி க்கப் பட்டது. உள்ளிட்ட தீ ர்மானங் கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்து சாமி, வி.சிவக்குமார், த.ஜெய பாண்டியன், ஆர்.நாராயண சாமி, தங்க.ஆனந்தன், கே.ஆர். ராயர், கே.ஆர்.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், தெ.காசி ராஜன், பி.சுப்பிரமணியன், கே.ஆர்.தனஞ்செயன்,

ஆர்.விஜயசுந்தரம், ஏ.எஸ். மதியழகன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேல் வி.ஜி.பி.சபாநாய கம், டி.திருமூர்த்தி,வி.பி.பாலு, பா.திருமாவளவன்,

பி.சுந்தரபாண்டியன், ஆர். கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன், ம.சோழன், வி. கோவிந்தசாமி, கே.மகேஷ், கட லூர் மாநகர செயலாளர்: கே. எஸ்.ராஜா, தலைமை செயற் குழு உறுப்பினர் வி.ஞானசேக ரன், வே.விக்கிரமன், பொதுக் குழு உறுப்பினர் கே.பி.ஆர்பால முருகன், த.ஜேம்ஸ் விஜயரா கவன்,ச.கல்யாணசுந்தரம், எஸ். பி.கண்ணன், என்.டி.கணேசன், பா.கோதண்டபாணி, ர.மஞ்சு,

கடலூர் பகுதி செயலாளர் கள்: ப.நடராஜன், பா.வெங்க டேஷ், எஸ்.சலீம், மு.இளைய ராஜா, நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமர், த.தமிழ்ச் செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்கொழுந்து பேரூர் செயலாளர்கள் எஸ். கணேசமூர்த்தி, கு.வே.ப. ஜெய் சங்கர், ப.மனோகரன், தேன் மொழி சங்கர், பூ.செல்வகுமார், க.பழனி,எம்.அன்வர்சதாத், மாவட்ட சார்பு அணி நிர்வா கிகள் இளைஞரணி ஜி.கார்த்தி கேயன், மாணவரணி ஆர்.சத்தி யநாராயணன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொ.பன்னீர்செல்வம், விவ சாய தொழிலாளர் அணி ம. ராமசாமி, மகளிர் அணி அமுத ராணி, மகளிர் தொண்டர் அணி ப.மனோரஞ்சிதம், பொறியாளர் அணி அப்பு.சந்தி ரசேகர்,வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி,கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை வி.எஸ். எல்.குணசேகரன்,

ஆதிதிராவிடர் நலக்குழு அணி ஆர்.பரந்தாமன், சிறு பான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி,விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்கு மார், மீனவர் அணி வீ.செல்வ பாரதி,சுற்றுசூழல் அணி ஆர். மணிவண்ணன்,அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி. தண்டபாணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக் கொழுந்து

உள்ளிட்ட மாவட்ட மாநக ரம்,ஒன்றியம்,நகர,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வா கிகள் கலந்து கொண்டனர்.

# எழும்பூர் தொகுதி: திட்டப் பணிகள்- இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆய்வு!

சென்னை,செப்.12-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும் பூர் சட்டமன்ற உறுப்பினரு மான வழக்கறிஞர் இ.பரந்தா மன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99 மற்றும் 108க்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் மாநகராட் சிப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம் பாட்டு நிதியின் கீழ் மேற் கொள்ளப்பட்டு வரும் பணி கள், வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியப் பணிகள் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

வார்டு எண்.108இல், சேத்துப்பட்டு, மேயர் இராம நாதன் சாலையில் உள்ள பெரு நகர சென்னை மாநகராட்சிக் குச் சொந்தமான தூய்மைப் பணி ஆய்வாளர் கட்டிடத்தின் ஒரு பகுதியில் சேத்துப்பட்டு நியாயவிலைக் கடையை இடம் மாற்றம் செய்வதற்கு ஏற்ப அக்கட்டிடத்தில் மேற் கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகள்;

மேயர் இராமநாதன் சாலையில் உள்ள மாநகராட் சிப் பூங்காவைப் புன ரமைக் கும் பணி; மங்களபுரம் 4வது தெருவில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலைப் புன ரமைக்கும் பணி; மாணிக் கவாசகம் தெருவில் அச்சாலை யின் பெயர்ப்பலகை வைக்கும் பணி;

ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில் சட்டமன்ற உறுப்பி னர் தொகுதி மேம்பாட்டு நிதி யின் கீழ் 2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடந்துவரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுமானப் பணி யின் முன்னேற்றம் மற்றும் அக் கட்டிடத்தில் மின்தூக்கி, மின் சாதனங்களை நிறுவும் பணிகள்;

லாடர்ஸ் கேட் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 29.82 இலட்ச ரூபாய் மதிப் பீட்டில் நடந்து வரும் பல் நோக்குக் கூடக் கட்டுமானப் பணி; லாடர்ஸ் கேட் பகுதி யில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 29.86 இலட்ச ரூபாய் மதிப் பீட்டில் நடந்துவரும் செயற்கை ஆடுகளம் அமைக் கும் பணி;

சதாசிவம் தெருவில் சட் டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 24.41 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நடந்துவரும் பல்நோக்குக் கூடக் கட்டுமானப் பணி;

ஓட்டேரி, பிரிக்ளின் சாலையில் நடைபாதை அமைக்கும் பணி;

புரசைவாக்கம், கங்கா தீஸ்வரர் கோவில் தெருவில் உள்ள சென்னை ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடந்துவ ரும் முதல் தளத்துடன் கூடிய வகுப்பறைகள் கட்டும் பணி;

ஆகிய பணிகளின் முன் னேற்றம் குறித்து சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் ஆய்வு செய்து, இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு சம்மந் தப்பட்ட துறை அலுவலர்களி டம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சி, மண் டலம்8இன் செயற்பொறியா ளர் (பொறுப்பு) சுரேஷ்பாபு, 99வது வட்ட உதவிப் பொறி யாளர் சிவகுமார், 108வது வட்ட உதவிப் பொறியாளர் மஸ்தானி; மாநகராட்சி சுகா தாரத்து றையைச் சேர்ந்த உதவி நகர மருத்துவ அலுவலர் டாக்டர் சுகன்யா தேவி, மண் டல மருத்துவ அலுவலர் டாக் டர் சுதா, சுகாதார ஆய்வாளர் சபிதா; சென்னைப் பெருநக ரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், பகுதி 8இன் பகுதிப் பொறியா ளர் ரவூஃப், 99வது வட்ட டிப்போ உதவிப் பொறியாளர் சுபாஷ், 108வது வட்ட டிப்போ உதவிப் பொறியாளர் பரணி; மின்வாரியத்தைச் சேர்ந்த எழும்பூர் பகுதி உதவி செயற்பொறியாளர் சுரேஷ், சேத்துப்பட்டு பகுதி உதவி செயற்பொறியாளர் செல்வ ராஜ், புரசைவாக்கம் பகுதி உதவி செயற்பொறியாளர் தமிழ் செல்வன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

மேலும், எழும்பூர் தெற் குப் பகுதி முன்னாள் செயலா ளர் ஜெ.விஜயகுமார், முன் னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், 108வது வட்டத் துணைச் செய லாளர் கே.சீனிவாசன், எழும் பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற் றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்ப ரசன், 108 ‘அ’ வட்ட இளைஞ ரணி அமைப்பாளர் பு.சதிஷ்கு மார், 108வது வட்ட இளைஞ ரணி அமைப்பாளர் மணி, 108 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெயகுமார், சூர்யா; 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சந்தோஷ்கு மார், 99வது வட்ட இளைஞ ரணி துணை அமைப்பாளர் திவாகர், எழும்பூர் தெற்குப் பகுதி மாணவர் அணி அமைப் பாளர் குருமூர்த்தி, எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்து லெட்சுமி மற்றும் தேவநிதி, சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்க ளும் கலந்து கொண்டனர்.

# வேளச்சேரி மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி., அறிவிப்பு!

வேளச்சேரி மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் இன்று (12.09.2025 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணி அளவில், சிறுவர் விளையாட்டு பூங்கா, விஜயநகர், 1வது மெயின் ரோடு, வேளச்சேரி, பகுதிக் கழக அலுவலகம் (176 வது வார்டு அலுவலகம்) நடைபெறுகிறது.

கூட்டத்தில் பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்கும் மாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** கழக ஆக்கப் பணிகள்.

வேளச்சேரி **வே.ஆனந்தம்** எம்.சி.,
**பொறுப்பாளர் வேளச்சேரி மேற்கு பகுதி தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். ஸ்ரீதர்

### செப்டம்பர் 12 (2020)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்

### செப்டம்பர் 12 (2019)



வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களின் ஒருவர்.

ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பிராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**